CELEBRATING 100 YEARS OF HOLINESS | CHURCH OF THE Nazarene

OUT OF MANY

# one

OUT OF ONE

# many

## நசரேயத் திருச்சபையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள்

அக்டோபர் 5, 2008

தலைவர்களின் கையேடு

**Commemorative Booklet**
in **Tamil**
Copyright © 2007
Nazarene Publishing House. Kansas City, MO

All statistics are from 2006 official reports, the most current at time of printing.

Permission to reproduce this Leader's Guide by any mechanical or electronic means, in whole or in part, is granted only to the local Churches of the Nazarene. Use of this material is intended for noncommercial use within the church. None of the material in this program may be reproduced for any commercial promotion, advertising, or sale of a product or service. Sharing of this material with other churches or organizations is also prohibited without written permission from the copyright holder. All rights reserved.

Nazarene Publishing House does not give permission for any material it does not own. The original user is responsible to secure any copyright permissions needed.

All Scripture quotations are taken from Tamil Bible O.V. © The Bible Society of India.

**Authors**
R. Franklin Cook
Mark Cork
Debbie Salter Goodwin
Roger L. Hahn
Philip Hamner
Stan Ingersol
Gay Leonard
Mark Littleton
Jesse C. Middendorf
Sherry Pinson
Bayse "Bud" Reedy Jr.

**Translators**
South Asia Literature Committee



*வாழ்த்துக்கள்!*

எங்குமுள்ள நசரேயருக்கு வாழ்த்துக்கள்! இன்று நாம் உலகெங்கிலுமுள்ள 18,000 உள்ளூர் சபைகளிலும் நூறாமாண்டுக் கொண்டாட்டங்களிலும் ஒன்றாக ஆராதிக்கும் போது, நசரேயத் திருச்சபை உலகளாவிய ஊழியத்தில் ஒரு அற்புதமான நூற்றாண்டையும், எதிர்காலத்துக்காகத் தூண்டுதலளிக்கும் நம்பிக்கையையும் கொண்டாடுகிறோம்.

நசரேயனாகிய இயேசுவைப் பின்பற்றும் நாம் ஒரு செய்தியினாலும், ஒரு ஊழியப் பொறுப்பினாலும் ஒன்றாக



இருப்பவர்கள் [இடமிருந்து வலமாக]: ஜேம்ஸ் எச். டயல், ஜெர்ரி டி. போர்ட்டர், பால் ஜி. கன்னிங்ஹாம்
நிற்பவர்கள் [இடமிருந்து வலமாக]: நினா ஜி. ஹண்டர், ஜே.கே. வார்ரிக், ஜெசி சி. மிட்டண்டார்ஃப்

இணைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையும் ஊழியமும் நம்மைக் கவர்ந்திழுத்திருக்கிறது. நாம் அவருடைய பரிசுத்த ஆவியானவரால் முற்றிலுமாக மறுரூபமாக்கப்பட்டிருக்கிறோம். அவர் நம்மை மீட்டுக் கொண்டு, மன்னித்து, முழுமையாகப் பரிசுத்தமாக்கியிருக்கிறார். ஒவ்வொரு மொழியிலும், கலாச்சாரத்திலும், இனத்திலும், நாட்டிலும் இருக்கும் மக்களுக்குத் தேவனுடைய அன்பைப் பகிர்ந்துகொள்ளுவதில் நாம் துடிப்போடு செயல்படுகிறோம். ஜாதிகளைச் சீஷராக்குவதே நமது ஊழியப் பொறுப்பாகும்.

பொதுக்கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் குழு 2008 அக்டோபர் 5ஆம் நாளாகிய இந்த நாளை நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட ஞாயிறாக அறிவித்திருக்கிறது. நாம் ''பலவற்றிலிருந்து ஒன்று, ஒன்றிலிருந்து பல'' என்பதைக் கொண்டாடும்போது இந்த வரலாற்றுபூர்வமான வேளையைக் குறிக்கும்படி 151 உலகப் பகுதிகளைச் சேர்ந்த சகோதர சகோதரிகளோடு ஒன்றாகச் சேரும்படி உங்களை அழைக்கிறோம். நாம் ஒரு புதிய நூற்றாண்டில் ''நம்பிக்கையானவரான இயேசுவை'' அறிவிக்கும்போது நமது கொண்டாட்டம் ஊழியத்தில் இன்னும் பிரகாசமான வருங்காலத்துக்குள் நம்மைக் கொண்டுசெல்லுவதாக!

பொதுக் கண்காணிப்பாளர்கள் நிர்வாகக் குழு

http://nazarene.org/ministries/superintendents/display.aspx



# நசரேயத் திருச்சபை நூற்றாண்டு விழா

இன்று நாம் ஆராதிக்கும்போது, மக்கள் வசிக்கும் ஒவ்வொரு கண்டத்திலும் 24 நேரப் பிராந்தியங்களில் இருக்கும் 18,000க்கும் மேற்பட்ட சபைகளைச் சேர்ந்த 1.6 மில்லியன் நசரேயர்களோடு ஒரு உலகளாவிய கொண்டாட்டத்தில் பங்கெடுக்கிறோம்.

பல நாடுகளிலும், கலாச்சாரங்களிலும், மொழிகளிலும் நாம் பரவியிருக்கும் நமது பல்வேறுபட்ட தன்மையைக் கொண்டாடுகிறோம்.

இரட்சிப்பிலும் பரிசுத்த வாழ்க்கையிலும் நம்பிக்கை கொண்டிருப்பதில் நமது ஐக்கியத்தைக் கொண்டாடுகிறோம்.

காலம்காலமாகத் தேவன் தமது சபைக்கு உண்மையுள்ளவராக இருப்பதையும் எதிர்காலத்துக்கான அவருடைய வாக்குத்தத்தத்தையும் கொண்டாடுகிறோம்.

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள்தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கீறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். 1 பேதுரு 2:9—10*

**பரிசுத்தத்தைப் பிரகடனம் செய்வதில் 100 ஆண்டுகளைக் கொண்டாடுதல்**

**அக்டோபர் 5, 2008**

# நாம் இவைகளை விசுவாசிக்கிறோம்

# நசரேயத் திருச்சபையின் விசுவாசக் கோட்பாடுகள்

I. திரியேக தேவன்

நாம் நித்திய காலமாக ஜீவிக்கும், ஆதியந்தமில்லாத தேவனை விசுவாசிக்கிறோம். அவர் பிதா, குமாரன், ஆவி என்னும் திரித்துவத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளார்.

II. இயேசுகிறிஸ்து

இவர் நித்தியகாலமாகப் பிதாவோடு ஒன்றாக இருக்கிறவர், பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தவர். இவர் நமது பாவங்களுக்காக மரித்து மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தார் என்று விசுவாசிக்கிறோம்.

III. பரிசுத்த ஆவியானவர்

இவர் எப்போதுமே பிரசன்னமாகி, துடிப்போடு செயல்டுகிறவர். பாவத்தைக்குறித்து உலகத்தை உணர்த்துகிறார். மனந்திரும்புகிறவர்களை மறுபடியும் பிறக்கச் செய்கிறார். விசுவாசிகளைப் பரிசுத்தமாக்குகிறார், எல்லாச் சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துகிறார் என்று விசுவாசிக்கிறோம்.

IV. பரிசுத்த வேதாகமம்

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமுள்ள 66 புத்தகங்களும் தேவனுடைய ஏவுதலினால் கொடுக்கப்பட்டன என்றும், இவை நமது இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய சித்தத்தைப் பிழையில்லாமல் வெளிப்படுத்துகின்றன என்றும் விசுவாசிக்கிறோம்.

V. ஜென்மப் பாவம் மற்றும் தனிப்பட்ட பாவம்

ஆதாமின் சந்ததியராகப் பிறக்கும் எல்லோரும் ஜென்மப் பாவத்தினால் இயல்பில் கெட்டுப் போயிருக்கிறார்கள் என்றும், தேவனுடைய அறியப்பட்ட பிரமாணத்தை வேண்டுமென்றே



மீறும் தனிப்பட்ட பாவத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

VI. பாவ நிவாரணம்

சிலுவையில் இயேசுகிறிஸ்துவின் மரணத்தினாலும் அவருடைய சிந்தப்பட்ட இரத்தத்தினாலும் மட்டுமே இரட்சிப்பைப் பெற முடியும் என்று விசுவாசிக்கிறோம்.

VII. பின்தொடரும் கிருபை

சரியானதைச் செய்யும்படியும், பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெறும்படியாகப் பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்பும்படியும் தெரிந்துகொள்ளும் எல்லோரையும் தேவன் பலப்படுத்துவார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

VIII. மனந்திரும்புதல்

பாவத்தைக் குறித்து உண்மையாகவும், முழுமையாகவும் மனதை மாற்றிக்கொள்ளுதல் என்றும் பாவத்தை விட்டுத் தாளாகவே திரும்பி வருதல் என்றும் விசுவாசிக்கிறோம்.

IX. நீதிமானாக்கப்படுதல், மறுபடியும் பிறத்தல், புத்திரசுவிகாரம்

குற்றத்திலிருந்து முழுமையான மன்னிப்பும், பாவங்களின் தண்டனையிலிருந்து விடுதலையும் அருளப்பட்டுப் புதிய வாழ்க்கையைப் பெறுகிறோம், தேவன் தம்முடைய பிள்ளையாக விசுவாசியை ஏற்றுக்கொள்ளுகிறார் என்று விசுவாசிக்கிறோம்.

X. முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல்

இது மறுபடியும் பிறப்பதைத் தொடர்ந்து வருவது என்றும், இருதயம் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதையும் பரிசுத்த ஆவியானவர் உள்ளே வாசம்பண்ணுவதையும், கிருபையில் வளர்ச்சி பெறுவதையும் அளிக்கும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்றும் விசுவாசிக்கிறோம்.

XI. திருச்சபை

இது இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் மீட்பின் கிரியையைத் தொடர்ந்து செய்யும்படி பரிசுத்த ஆவியானவரால் ஒன்றாக அழைக்கப்பட்ட கிறிஸ்துவின் சரீரம் என்று விசுவாசிக்கிறோம்.

XII. ஞானஸ்நானம்

இயேசுகிறிஸ்து அருளும் பாவ நிவாரணத்தின் பயன்களை ஏற்றுக்கொள்ளுவதைக் குறிக்கும் ஒரு சாக்கிரமெந்து என்றும், இது விசுவாசிகளுக்குக் கொடுக்கப் படுகிறது என்றும் விசுவாசிக்கிறோம்.

XIII. கர்த்தருடைய இராப்போஜனம்

இயேசுகிறிஸ்துவின் பலி மரணத்தை அறிவிக்கும் ஒரு நினைவுகூருதல் சாக்கிரமெந்து என்று விசுவாசிக்கிறோம்.

XIV. தெய்வீக குணமாகுதல்

தெய்வீக குணமாகுதல் குறித்த வேதாகம உபதேசத்தை விசுவாசித்து, விசுவாச ஜெபத்தை வலியுறுத்துகிறோம். தேவன் மருத்துவ அறிவியலின் மூலமாகவும் குணமாக்கு கிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

XV. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார் என்று விசுவாசிக் கிறோம். அவரில் தரித்திருப்பவர்கள் ஆண்டவரைச் சந்திக்கும்படியும், அவரோடு எப்போதும் இருக்கும்படியும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று விசுவாசிக்கிறோம்.

XVI. உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு, நித்திய முடிவு

மரித்தோர் உயிர்த்தெழுதலையும், எல்லோரும் நியாயத் தீர்ப்புக்காகத் தேவனுக்கு முன்னால் தனிப்பட்ட முறையில் செல்லுவார்கள் என்பதையும், மனந்திரும்பியவர்கள் நித்திய வாழ்வுக்கும், மனந்திரும்பாதவர்கள் நித்திய துன்பத்துக்கும் அனுப்பப்படுவார்கள் என்பதையும் விசுவாசிக்கிறோம்.



# ஒன்றாகவும் பலவாகவும் இருந்த ஒரு நூற்றாண்டு

நசரேயர்களின் நூற்றாண்டு விழா ஏற்கெனவே இருக்கும் குடும்பங்களை ஒன்றிணைத்து, புதிதாக ஒன்றை உருவாக்கிய திருமண உறவை நினைவுகூருதலாக இருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் நசரேயர்கள் பெரும்பாலும் அமெரிக்கக் குடும்பத்தினராக இருந்தார்கள். மற்ற நாடுகளில் சில உறவினர்கள் இருந்தார்கள். இன்று நாம் மக்கள் குடியிருக்கும் ஒவ்வொரு கண்டத்திலும் சபைகளைக் கொண்ட ஒரு சர்வதேச சமூகமாக இருக்கிறோம். எந்தவொரு தனிப்பட்ட மொழியோ, இனமோ அல்லது நாடோ நமது உறுப்பினர்களில் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை.

## பலவற்றிலிருந்து ஒன்று – பரிசுத்தத்தில் ஐக்கியம்

பரிசுத்த இயக்கம் மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை குறித்த அதன் வலியுறுத்தல் இவைகளுக்கு ஒரு வெளிப்பாடாக ஒரே மக்களாக இணைக்கும்படி நமது ஸ்தாபகர்கள் ஒன்றாக வந்தார்கள். துவக்ககால நசரேயர்கள் விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே நீதிமானாக்கப்படுதல், விசுவாசத்தின் மூலமாகக் கிருபையினாலே பரிசுத்தமாக்கப்

**நசரேய சபையின் கால வரிசை**

1887 நசரேயத் திருச்சபையின் முதல் தாய்ச்சபை அமைக்கப்பட்டது: ரோட் தீவில் பிராவிடன்ஸ் என்ற இடத்தில் மக்கள் சுவிசேஷ சபை துவங்கப்பட்டது.

1890 நசரேயத் திருச்சபையின் வழியில் துவக்க அமைப்பான மத்திய சுவிசேஷ பரிசுத்த சங்கம் பத்து நியூ இங்கிலாந்து பரிசுத்த சபைகளினால் துவங்கப்பட்டது.

1895 லாஸ்ஏஞ்சலிஸ் நகரில் நசரேயத் திருச்சபை அமைக்கப்பட்டது. 1906க்குள்ளாக நாற்பதுக்கும் மேற்பட்ட சபைகள் இயங்கி வந்தன.

படுதல், முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல், மானிட வாழ்க்கையில் தேவனுடைய கிரியைக்கு ஆவியானவர் சாட்சி கூறுதல் ஆகிய ஜாண் வெஸ்லியின் அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து தங்களுடைய ஆவிக்குரிய தரிசனத்தைப் பெற்றார்கள். இந்தக் கோட்பாடுகளை, குறிப்பாக முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதலை வலியுறுத்தும்படியாக 1830ஐ அடுத்த ஆண்டுகளில் பரிசுத்த இயக்கம் எழுந்தது. 1900க்குள்ளாக இந்த இயக்கம் பல பிரிவுகளைக் கொண்டிருந்தது.

பரிசுத்த இயக்கத்தின் பிரிவுகளை ஐக்கியப்படுத்தும்படி பினெயாஸ் எஃப். பிரெசி, சி. டபிள்யூ. ரூத் மற்றும் ஒப்படைப்புள்ள பிற தலைவர்களும் முயற்சிசெய்தார்கள்.

- 1907ஆம் ஆண்டு அக்டோபரில் இல்லினாயிஸ் மாநிலத்திலுள்ள சிக்காகோவில் நடந்த முதல் பொதுக் கூடுகையில் அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கமும் நசரேயத் திருச்சபையும் ஒன்றாக இணைந்தன.
- 1908ஆம் ஆண்டு டெக்சாஸ் மாநிலம் பெனியேலில் அமைக்கப்பட்ட ஒரு சபை டெக்சாஸ் மாநிலத்துப் பரிசுத்த சங்கத்தின் முக்கியமான அலுவலர்களை நசரேய இயக்கத்துக்குள் கொண்டுவந்தது.

**நசரேய சபையின் கால வரிசை**

1895 நியூயார்க், புரூக்லினைச் சேர்ந்த மூன்று சபைகள் அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கத்தைத் துவங்கின.

1896 மத்திய சுவிசேஷ பரிசுத்த சங்கமும், அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கமும் ஒன்றாக இணைந்தன. 1907ஆம் ஆண்டு நோவா ஸ்கோஷியா முதல் ஐயோவா வரையில் கிட்டத்தட்ட 50 சபைகள் இயங்கிவந்தன.

1898 நசரேயத் திருச்சபையின் ஒரு தாய் அமைப்பின் மூலமாக முதல் அருட்பணி ஊழியம் துவங்கப்பட்டது: தற்போதைய யூரேசியா பிராந்தியத்தில் முதன்முறையாக இந்தியாவில் அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கம் ஊழியத்தைத் துவங்கியது.



- 1908ஆம் ஆண்டு செப்டம்பரில் பரிசுத்த கிறிஸ்தவ சபையின் பென்சில்வேனியா மாநாடு நசரேய சபையோடு இணைந்தது.
- 1908ஆம் ஆண்டு அக்டோபரில் டெக்சாஸ் பைலட் பாயின்டில் ஹோலினஸ் சர்ச் ஆஃப் கிரைஸ்ட் சபையின் தலைமையகத்தில் இரண்டாவது பொது அசெம்பிளி கூடியது. இந்த ‘‘ஐக்கியத்தின் ஆண்டில்’’ தெற்கத்திய சபைப்பிரிவு அதன் வடக்கத்திய சபைப்பிரிவோடு இணைந்தது.

1915ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தின் பெந்தெகொஸ்தே சபையும், பெந்தெகொஸ்தே மிஷனும் இணைந்தபோது நசரேயத் திருச்சபை ஏழு முந்தைய சபைப்பிரிவுகளையும் இரண்டு மற்றக் குழுக்களின் பகுதிகளையும் தன்னோடு சேர்த்துக்கொண்டிருந்தது.

## ஒன்றிலிருந்து பலவாக – உலகத்துக்கு ஒரு ஊழியப் பொறுப்பு

நசரேயத் திருச்சபையானது ஐக்கியத்தின் மூலமாக பல கலாச்சாரங்களையும் மொழிகளையும் கொண்ட ஒரே மக்களாக ஒன்றிணைந்தது. 1908ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் கனடாவிலும் சபைகள் செயல்பட்டு வந்தன. இந்தியா, கேப்வெர்ட், மெக்சிகோ, ஜப்பான் ஆகிய இடங்களில் ஒழுங்குரீதியான ஊழியங்கள் நடந்துவந்தன.

**நசரேய சபையின் கால வரிசை**

1898 பெந்தெகொஸ்தே அலையன்ஸ் (பின்னாட்களில் பெந்தெகொஸ்தே மிஷன்) டென்னசியில் நாஷ்வில்லில் துவங்கப்பட்டது.

1899 நசரேயத் திருச்சபையின் முதல் தாய்க் கல்லூரி துவங்கப்பட்டது: டெக்சாஸ் ஹோலினஸ் (பின்னாட்களில் பெனியேல்) பல்கலைக்கழகம் டெக்சாசில் கிரீன்வில்லுக்கு அருகில் துவங்கப்பட்டது. இது தெற்கு நசரேய பல்கலைக் கழகத்தின் தாய் அமைப்பாகும்.

விரைவிலேயே ஆப்பிரிக்காவுக்கும் சீனாவுக்கும் ஊழியம் விரிவுபடுத்தப்பட்டது. பொதுக்கண்காணிப்பாளராக இருந்த எச். எஃப். ரேனால்ட்ஸ் ‘‘உலக ஊழியப் பொறுப்புக்கான’’ அழைப்பை விடுத்தார். உலகளாவிய சுவிசேஷ ஊழியத்துக்கு ஆதரவளிப்பது நசரேய வாழ்க்கையின் ஒரு தனிச்சிறப்பான பண்பாக ஆகியது.

சபையானது கலாச்சாரத்திலும், மொழியிலும் பல்வேறுபட்ட தன்மையில் வளர்ச்சிபெற்றபோது, 1980இல் அது *சர்வதேசமயமாக்கலுக்குத்* தன்னை ஒப்புக்கொடுத்தது – துவக்ககால புரோட்டஸ்தாந்து சபைப்பிரிவுகளைப்போலத் தேசிய சபைகளாகப் பிரிந்துபோகாமல் உலகெங்கிலும் **பல சபைகளைக் கொண்ட ஒரே திருச்சபையாகத்** தன்னை உறுதிப்படுத்தியது. 2001ஆம் ஆண்டு பொதுக் கூடுகைக் குள்ளாகக் கலந்துகொண்ட பிரநிதிகளில் 42 சதவீதத்தினர் ஆங்கில மொழியைத் தங்கள் இரண்டாவது மொழியாகக் கொண்டிருந்தார்கள் அல்லது அந்த மொழியில் பேசவே அவர் களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இன்று நசரேயர்களில் 60 சதவீதத்தினர் மட்டுமின்றி, அதன் 428 மறைமாவட்டங்களில் 80 சதவீதமும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வெளியே இருக்கின்றன.

எதிர்வரும் நூற்றாண்டு பல புதிய அறைகூவல்களைக் கொண்டுவரும். ஆனால் நமது திசையைக் குறித்த உணர்வை நாம் பெற்றிருக்கிறோம். ஒரே சபையாக நாம் தொடர்ந்து பலரையும் சேர்ப்பதை நாடுவோம். பலரையும் கொண்ட சபையாக நாம் ஒன்றாக இருப்போம்.

---

**நசரேய சபையின் கால வரிசை**

1901 அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கம் கேப்வெர்டில் ஊழியத்தைத் துவங்கியது. இது சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் இரண்டாவது நாடாகும். இது ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் முதல் நாடாக இருக்கிறது.



# ஒரு நூற்றாண்டு கால ஊழியத்தைக் ... கொண்டாடுதல்

நசரேயத் திருச்சபை எப்போதுமே ஒரு சர்வதேசக் குடும்பமாக இருந்து வந்திருக்கிறது. 1908இல் பல்வேறு குழுக்கள் ஒன்றாக இணைந்தபோது, அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா [1898இல் நிறுவப்பட்டது], கேப் வெர்ட் [1901], கனடா [1902], மெக்சிகோ [1903], ஜப்பான் [1907] ஆகிய இடங்களில் ஊழியம் செய்துவந்தார்கள். 1915இல் இணைந்த குழுக்களின் மூலமாக குவாட்டமாலா [1901], கியூபா [1902], ஸ்காட்லாந்து [1906] ஆகிய இடங்களில் ஊழியம் நடத்தப்பட்டுவந்தது. 2008இல் ஒரு ஐக்கியமான சபைப்பிரிவாக நசரேயத் திருச்சபை தனது நூறாவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில் இந்தப் பகுதிகளில் அதன் தாய்ச் சபைகளினால் நடத்தப்பட்ட ஊழியங்கள் இரண்டாவது நூற்றாண்டுக்குள் கடந்து சென்றிருக்கின்றன.

இன்று உலக அருட்பணி நிறுவனமானது நூற்றுக் கணக்கான அருட்பணியாளர்களை அனுப்புவதோடுகூட ஆயிரக்கணக்கான சுதேசி ஊழியர்களுக்கும் ஆதரவளித்து வருகிறது. இவர்கள் மக்கள் வசிக்கும் எல்லாக் கண்டங்களிலும் பரிசுத்தத்தைக் குறித்த செய்தியை அறிவித்து வருகிறார்கள். நசரேய அருட்பணி ஊழியமானது ஆறு உலகப் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு பிராந்திய இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் உலக அருட்பணித் துறையின் மேற்பார்வையின் கீழாகச் செயல்படுகிறார்கள். ஆப்பிரிக்கா, ஆசியா–பசிபிக், கரீபியன், யூரேசியா, மெக்சிகோ மற்றும் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா இவை அந்த ஆறு பிராந்தியங்களாகும்.

உலக அருட்பணித் துறை இவைகளின் மூலமாகச் சபைகளுக்குத் தேவையான ஆதாரங்களைக் கொடுக்கிறது:

- **உலக அருட்பணி இலக்கியம்** – 95 மொழிகளில் பரிசுத்த இலக்கியம்
- **காருணிய ஊழியங்கள்** – பேரழிவு நிவாரணம், இக்கட்டில் நிர்வாகம், சிறுபிள்ளைகளைத் தத்தெடுத்தல், உணவு மற்றும் உடை வழங்கும் செயல்திட்டங்கள், நீண்ட காலத் தீர்வுகள்
- **நசரேய மிஷன் இன்டர்நேஷனல்** – கல்வி, ஜெபம், ஆதரவளித்தல்
- **உலக அருட்பணித் தொடர்புகள்** – ஒளி/ஒலிபரப்புகள், வீடியோக்களைத் தயாரித்தல், இணையதளம் (இன்டர்நெட்)
- **கல்வி** – குருத்துவ மற்றும் சாமானியப் பயிற்சி
- **பணியோடு சாட்சி** – கைவேலை. குறுகிய கால அருட்பணி, **Mission Corps** தன்னார்வ ஊழியங்கள், **Youth in Mission, YouthServe,** மாணவர்களுக்கான குறுகிய கால ஊழியங்கள்

---

**நசரேய சபையின் கால வரிசை**

1901 பெந்தெகொஸ்தே மிஷன் குவாடமாலாவில் நுழைகிறது. இது சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் ஊழியம் நடத்தப்பட்ட மூன்றாவது நாடாகும். இது தற்போதைய மெக்சிகோ/மத்திய அமெரிக்கப் பிராந்தியத்தில் ஊழியம் நடைபெற்ற முதல் நாடாக இருக்கிறது.

1902 பெந்தெகொஸ்தே மிஷன் கியூபாவில் நுழைகிறது. இது சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் ஊழியம் நடத்தப்பட்ட நான்காவது நாடாகவும், தற்போதைய கரீபியப் பிராந்தியத்தில் ஊழியம் நடைபெற்ற முதல் நாடாகவும் இருக்கிறது.

1902 அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் அமைப்பு கனடாவில் சபைகளை அமைக்கிறது. இது சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் ஊழியம் நடத்தப்பட்ட ஐந்தாவது நாடாகும்.



- ***இயேசு* திரைப்பட அறுவடைப் பங்குதாரர்கள்** – திரைப்படத்தின் மூலம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல். 1998இலிருந்து ஐந்து மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுத்திருக்கிறார்கள், கிட்டத்தட்ட 8000 புதிய மிஷன் சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

http://nazarene.org/ministries/worldmission/display.aspx

---

**நசரேய சபையின் கால வரிசை**

1903 இன்டிபென்டென்ட் ஹோலினஸ் சபை மெக்சிகோவில் நுழைகிறது. இது சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் ஊழியம் நடத்தப்பட்ட ஆறாவது நாடாகும்.

1904 இன்டிபென்டென்ட் ஹோலினஸ் சபையையும் டெக்சாஸ் ரைசிங் ஸ்டாரிலுள்ள நியூடெஸ்டமென்ட் சபையும் சேர்ந்து ஹோலினஸ் சர்ச் ஆஃப் கிரைஸ்ட் சபை உருவாக்கப் பட்டது. 1908ஆம் ஆண்டுக்குள்ளாக அது ஜார்ஜியாவிலிருந்து நியூ மெக்சிகோ வரையில் வளர்ச்சி பெற்றிருந்தது.

1904 அமெரிக்காவில் உள்நாட்டு ஊழியம் லாஸ் ஏஞ்சலிசிலில் குடியேறிய சீனர்கள் மத்தியில் நடத்தப்பட்டது.

1906 ஸ்காட்லாந்து பெந்தெகொஸ்தே சபையின் தாய்ச் சபையாகிய பார்க்லண்ட் பெந்தெகொஸ்தே சபை கிளாஸ்கோ நகரில் அமைக்கப்பட்டது. ஸ்காட்லாந்து சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் ஊழியம் நடத்தப்பட்ட ஏழாவது நாடாகும்.

## உலகளாவிய அருட்பணி

நாம் முன்பு ‘‘வெளிநாட்டு அருட்பணி’’ ‘‘உள்நாட்டு அருட்பணி’’ என்று அழைத்து வந்த ஊழியங்கள் இப்போது உலகளாவிய அருட்பணி என்று அழைக்கப்படுகின்றன. இது அமெரிக்க ஐக்கிய நாடுகளையும், கனடாவையும் அருட்பணித் தளங்களாக உள்ளடக்கியிருக்கிறது. நூறாண்டுகளுக்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலும் ஒவ்வொரு பட்டணத்திலும் சமுதாயத்திலும் ஒரு நசரேயச் சபை ஊழியம் செய்துவருகிறது.

இவைகளின் மூலமாக உள்ளூர் சபைகளுக்கும், மறைமாவட்டங்களுக்கும் ஆதாரங்கள் அளிக்கப்படுகின்றன:

- **குருத்துவ வளர்ச்சி:** பணிக்குச் சேர்த்தல், ஆயத்தமளித்தல், பரிசுத்தம் குறித்த சுவிசேஷத்தில் வாஞ்சை கொண்ட அருட்பணித் தலைவர்களுக்கு ஆதரவளித்தல்.
- **அருட்பணிச் செயல்தந்திரம்:** பல்வேறு கலாச்சார, புறநகர் மற்றும் காருணிய ஊழியங்களை வழிநடத்துதல், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலும் குடியேறுகிறவர்களின் மத்தியில் முதல் முயற்சி செய்தல்.
- **சுவிசேஷ ஊழியத்துக்கான ஆதாரங்கள்:** கிறிஸ்துவுக்காக இழந்துபோனவர்களை எட்டிச் சென்று, சீஷத்துவத்துக்குள் அவர்களை வழிநடத்துதல்.



நசரேய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்குள்ளாக NewStart ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய சபைகளை நிறுவியிருக்கிறது. இன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலும் இருக்கும் சபைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும், அதிகரிப்பையும் பெற்று வருகின்றன:

- 6000 சபைகள்
- 750,000 உறுப்பினர்கள்
- 500,000 பேர் ஞாயிறுபள்ளி வருகை
- 800,000 பேர் ஆராதனைக்கு வருதல்

http://nazarene.org/ministries/ucme/display.aspx

---

**நசரேய சபையின் கால வரிசை**

1907 இல்லினாயிஸ் மாநிலத்து சிக்காகோவில் அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கமும் நசரேயத் திருச்சபையும் முதலாம் பொதுக் கூடுகையில் ஒன்றாக இணைந்து பெந்தெகொஸ்தே நசரேயத் திருச்சபை உருவாக்கப்பட்டது.

1907 ஜப்பானில் ஊழியம் துவங்குகிறது. இது சபைப்பிரிவு உருவாகுவதற்கு முன்னால் ஊழியம் நடத்தப்பட்ட எட்டாவது நாடாகும். தற்போதுள்ள ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இது ஊழியம் நடத்தப்பட்ட முதலாவது நாடாகும்.

# ஒரு நூற்றாண்டு காலக் கல்வி வளர்ச்சியைக்

## ... கொண்டாடுதல்

துவக்ககாலப் பரிசுத்த இயக்கத் தலைவர்கள் பல பல்கலைக்கழகங்களையும், இறையியல் கல்லூரிகளையும், கல்லூரிகளையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் ஸ்தாபித்தார்கள். 1908 பொதுக் கூடுகையில் சபை ஸ்தாபிக்கப்பட்டபோது 10,000 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆனால் ஏற்கெனவே பதினான்கு கல்வி நிறுவனங்கள் இயங்கிவந்தன. நமது முதல் பொதுக் கண்காணிப்பாளராகிய டாக்டர் பினெயாஸ் பிரெசி ‘‘சபையானது மேல் நிலைக் கல்வியை அரசாங்கத்துக்கோ அல்லது மற்றவர்களுக்கோ விட்டுக்கொடுக்குமானால், அது விரைவிலேயே தனது மரபுரிமை கொள்ளையடிக்கப்பட்டிருக் கிறது என்பதை உணரும்’’ என்று சொல்லியிருக்கிறார்.

இந்த மரபுரிமையின்மீது கட்டியெழுப்பப்பட்டு இப்போது நசரேயத் திருச்சபை உலகெங்கிலுமுள்ள 40 நாடுகளில் 56 கல்லூரிகளையும், இறையியல் கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் கொண்டிருக்கிறது. உலகமெங்கிலும் 40,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் நேரடிக் கல்வியிலும் விரிவாக்கக் கல்வியிலும் சேர்ந்து படித்துவருகிறார்கள். நமது கல்வி நிறுவனங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் தரமான குருத்துவக் கல்வியையும், முற்போக்கான கலைக் கல்வி யையும் வழங்கிவருகின்றன. இந்தப் பள்ளிகள் போதகர் களையும், அருட்பணியாளர்களையும், குருத்துவம் சாராத ஊழியர்களையும் ஆயத்தம்செய்து வருகின்றன. இவர்கள் சுவிசேஷ ஊழியம், சீஷத்துவம், சபை ஸ்தாபித்தல் இவைகளின் மூலமாகக் கிறிஸ்துவுக்காகத் தாக்கம் விளைவித்து வருகிறார்கள்.

http://nazarene.org/education/iboe/display.aspx

---

**நசரேய சபையின் கால வரிசை**

1908 டெக்சாஸ் பைலட் பாயின்டில் நடத்தப்பட்ட இரண்டாவது பொதுக் கூடுகையில் ஹோலினஸ் சர்ச் ஆஃப் கிரைஸ்ட், பெந்தெகொஸ்தே நசரேயத் திருச்சபையோடு சேர்ந்தது. 2008ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் நாள் இதன் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் நாளாகத் தெரிவுசெய்யப்பட்டிருக் கிறது.

1911 சுவாசிலாந்தில் ஊழியம் துவங்கப்படுகிறது. இது ஆப்பிரிக்கக் கண்டத்தில் முதல் நாடாகும்.



---

**நசரேய சபையின் கால வரிசை**

1911 ஒன்றிணைக்கப்பட்ட சபைகளின் வெளியீட்டு முயற்சிகள் மூன்றாவது பொதுக் கூடுகையில் உறுதிப்படுத்தப்பட்டன.

1911 புரோட்டஸ்தாந்து மெதாடிஸ்ட் சபையின் லூசியானா கான்பரன்சின் பெரும்பகுதி பெந்தெகொஸ்தே நசரேயத் திருச்சபையோடு இணைந்தது.

1912 மிசௌரியிலுள்ள கான்சாஸ் சிடியில் நசரேய வெளியீட்டு நிறுவனம் துவங்கப்பட்டது. சபைப்பிரிவின் பத்திரிகையாகிய *Herald of Holiness* பத்திரிகையின் வெளியீடு துவங்கப்பட்டது.

1913 *The Other Sheeep* பத்திரிகை துவங்குகிறது. பின்னர் இதன் பெயர் *World Mission* என்று மாற்றப்பட்டது.

# உள்ளூர் அருட்பணிப் பங்கெடுப்பின் ஒரு நூற்றாண்டைக்

### ... கொண்டாடுதல்

உலகெங்கிலுமுள்ள நசரேயத் திருச்சபையின் உள்ளூர் சபைகளில் உலக அருட்பணித் துறையின் அடிமட்ட சபைத் தொடர்பின் மையமாக நசரேய சர்வதேச அருட்பணி அமைப்பு (NMI) செயல்பட்டு வருகிறது. 1899ஆம் ஆண்டு இந்த அமைப்பு துவங்கப்பட்டது. அப்போது எட்டுப் பெண்கள் அமெரிக்க பெந்தெகொஸ்தே சபைகளின் சங்கத்தில் (APCA) அருட்பணிகளை மேம்படுத்தும் படியாக ஒரு சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். 1908க்குள்ளாக இந்தச் சங்கத்தில் 400 உறுப்பினர்கள் இருந்தார்கள். 1915ஆம் ஆண்டு நான்காவது பொதுக்கூடுகையானது பெண்கள் மிஷனரி சங்கத்தை (Woman's Missionary Society) ஒரு துணை அமைப்பாக அதிகாரபூர்வமாக அங்கிகரித்தது. 1952இல் இந்த அமைப்பு ஆண்களுக்கும், இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்த அமைப்பின் பெயர் பலமுறை மாற்றப்பட்டாலும் இதன் நோக்கம் மாறாமல் இருக்கிறது.

---

**நசரேய சபையின் கால வரிசை**

1913–14 ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா வழியாகப் பொதுக் கண்காணிப்பாளர் எச். ஆர். ரேனால்ட்சின் உளகளாவிய பயணம் அருட்பணிகளுக்கான காலகட்டத்தைத் துவக்கியது.

1915 பெந்தெகொஸ்தே மிஷன் சபை பெந்தெகொஸ்தே நசரேயத் திருச்சபையோடு இணைந்தது. இந்தச் சபை தன்னோடு தென்மேற்கு அமெரிக்கா, இந்தியா, க்யூபா, மெக்சிகோ மற்றும் குவாடமாலாவிலிருந்த சபைகளையும் அருட்பணி ஊழியங்களையும் கொண்டுவந்தது.

1915 ஸ்காட்லாந்தின் பெந்தெகொஸ்தே சபை பெந்தெகொஸ்தே நசரேயத் திருச்சபையோடு இணைந்தது.



இன்று NMI அமைப்பில் உலகெங்கிலுமுள்ள உள்ளூர் சபைகளில் 860,000 உறுப்பினர்கள் மற்றும் துணை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உள்ளூர் சபைகளில் அருட்பணிப் பங்கெடுப்பை ஊக்குவிக்கும் படியாக NMI நான்கு ஊழிய நோக்கங்களை மையப் பார்வையாகக் கொண்டிருக்கிறது.

- **ஜெபம்:** Prayer Mobilization Line, நசரேய உலக ஜெப வாரம், துன்புறுத்தப்படும் சபைக்காக ஜெபித்தல்.
- **உலகளாவிய உணர்வு:** பல்வேறு செயல்முறைகள் மற்றும் ஆதாரங்களின் மூலமாக அருட்பணிக் கல்வி.
- **சிறுபிள்ளைகளும், இளைஞரும்:** GenNext க்காக நேரடி மிஷன் அனுபவங்களில் பங்கெடுத்தல்.
- **நிதிசேகரித்தல்:** உலகச் சுவிசேஷ ஊழிய நிதி (ஆண்டுக்குச் சராசரியாக 200 கோடி ரூபாய்), அலெபஸ்டார், உலக அருட்பணி ஒலிபரப்பு, பிரதிநிதித்துவம், மற்றும் பிற காணிக்கைகள்.

http://www.nazarenemissions.org/

---

**நசரேய சபையின் கால வரிசை**

1915 பெண்கள் மிஷனரி சங்கம் (தற்போது Nazarene Mission International) நான்காவது பொது அசெம்பிளியில் அங்கிகரிக்கப் பட்டது.

1917 பெரு ஊழியம் துவங்குகிறது. தற்போதைய தென் அமெரிக்கப் பிராந்தியத்தில் இது முதல் நாடாகும்.

1919 ஐந்தாவது பொது அசெம்பிளியில் அதிகாரபூர்வமான பெயர் நசரேயத் திருச்சபை என்று சுருக்கப்பட்டது.

1919 அமெரிக்க இந்தியர்களுக்கு நடுவே ஊழியம் துவங்கப்படுகிறது.

# பரிசுத்தம் பற்றிய பிரசுரிப்புகளின் ஒரு நூற்றாண்டைக்

## ... கொண்டாடுதல்

அவர்களிடம் இரண்டே இரண்டு சிறிய அச்சு இயந்திரங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் 1912ஆம் ஆண்டு அர்ப்பணிப்புள்ள சில ஊழியர்கள் அபரிமிதமான விசுவாசத்தோடு நசரேயத் திருச்சபைக்கான வெளியீடுகளை அச்சிடத் துவங்கினார்கள். அன்றிலிருந்து நசரேய பிரசுர நிலையம் (NPH) சபையின் அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் பிரிவாகச் செயல்பட்டுவருகிறது.

பரிசுத்தம் குறித்த செய்தியை அளிப்பதற்காகத் தங்களுக்கேயுரிய நூல்களையும், இசையையும், பத்திரிக்கைகளையும், பாடத்திட்டங்களையும் உருவாக்கி அச்சிடுவதிலுள்ள ஞானத்தையும், மதிப்பையும் நமது துவக்ககாலச் சபைத் தலைவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஒரு முரண்படாத செய்தியைப் பிரசுரிக்க வேண்டும் என்ற அவர்களுடைய உறுதி அப்போதுதான் உருவாகியிருந்த சபையின் குழுவினரிடையே பிணைப்பை உருவாக்குவதற்கு அதிகமாக உதவியது. இன்று NPH ஆண்டுதோறும் 25 மில்லியனுக்கும் அதிகமான இலக்கியங்களைப் பிரசுரிக்கிறது.

- **Beacon Hill Press**: கிறிஸ்தவ வாழ்க்கை, ஆவிக்குரிய வளர்ச்சி, ஊழியம் மற்றும் தலைமைத்துவ ஆதாரங்கள், இறையியல் பாடப் புத்தகங்கள்.
- **Lillenas Publishing Company**: சபைப் பாடகர் குழுவுக்குத் தேவையான ஆராதனை இசைக் குறிப்புகள், நாடக ஆதாரங்கள், சிறுபிள்ளைகளுக்கான ஆராதனை இசை மற்றும் நாடகம்.
- **WorldAction Publishing Company**: ஞாயிறு பள்ளி மற்றும் சிறுகுழுக்கான கல்வித் திட்டம், விடுமுறை வேதாகமப் பள்ளி, கேரவான், சிறுபிள்ளைகளுக்கான ஆராதனை உபகரணங்கள்.
- **Barefoot Ministries**: இணையதளம் மற்றும் அச்சு மூலமான சீஷத்துவம், ஆவிக்குரிய வடிவமைத்தல், இளைஞர்களுக்கு தியானத்துக்கான ஆதாரங்கள்.

www.nph.com

**நசரேய சபையின் கால வரிசை**

1919 முதல் தேசிய மறைமாவட்டக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். மெக்சிகோவில் வி.ஜி. சான்டின் என்பவர் நியமிக்கப்பட்டார்.

1923 பொதுவான சபை ஆர்வங்களுக்கான ஒருங்கிணைந்த வரவுசெலவுத் திட்டத்தை மேற்பார்வையிடும்படியாக பொது நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டது.

1923 நசரேய இளைஞர்களின் சங்கம் (தற்போது Nazarene Youth International) அதிகாரபூர்வமாக்கப்பட்டது.

1925 இரண்டு நசரேய மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டன – சீனாவில் பிரெசி நினைவு மருத்துவமனை மற்றும் சுவாசிலாந்தில் ராலே பிட்கின் நினைவு மருத்துவமனை.



**நசரேய சபையின் கால வரிசை**

1926 *The Preacher's Magazine* பத்திரிகை துவங்கப்பட்டது.

1930 உலக அருட்பணிகளுக்காக முதல் ஈஸ்டர் காணிக்கை சேகரிக்கப்பட்டது.

1938 இந்தியாவில் ரேனால்ட்ஸ் மெமோரியல் மருத்துவமனை துவங்கப்பட்டது.

1945 ஆஸ்திரேலிய சபைப்பிரிவு நசரேயத் திருச்சபையோடு இணைகிறது.

1945 முதல் நசரேய இறையியல் பட்டப்படிப்புக் கல்லூரி துவங்குகிறது: மிசௌரி கான்சாஸ் சிடியில் நசரேய இறையியல் கல்லூரி.

## சீஷத்துவத்தில் ஒரு நூற்றாண்டைக்
## ... கொண்டாடுதல்

நசரேயத் திருச்சபையின் 1907ஆம் ஆண்டின் பொதுக்கூடுகை இப்படி அறிவித்தது: ‘‘ஒவ்வொரு (ஞாயிறு பள்ளி) ஆசிரியரும் ‘பூரண அன்பின்’ திட்டவட்டமான அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் ஒரு ஜீவனுள்ள எடுத்துக்காட்டைக்காண வேண்டும்.’’ அந்தத் துவக்க நாட்களில் பெரும்பாலான நசரேய சபை உறுப்பினர்கள் முதலில் ஞாயிறு பள்ளி உறுப்பினர்களாக இருந்தனர். உள்ளூர் ஞாயிறு பள்ளியின் மூலமாக ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள், உறவுகளை உருவாக்கிக்கொண்டார்கள், இரட்சிப்பின் செய்தியைக் கேட்டார்கள். இந்தச் சிறுகுழு சீஷத்துவத்தின் பாரம்பரியம் இன்றும் தொடருகிறது.

ஞாயிறு பள்ளி மற்றும் சீஷத்துவ ஊழியங்கள் பரிசுத்தத்தை மையமாகக் கொண்டு, கிறிஸ்தவ சீஷத்துவத்தை மேம்படுத்தும்படியாக அத்தியாவசியமான செயல் திட்டங்களையும், ஊழியத்துக் கான துவக்க வாய்ப்புக்களையும் கொடுக்கின்றன. சிறுவர் ஊழியங்களின் மூலமாக கிட்ஸ்

---

**நசரேய சபையின் கால வரிசை**

1945 *Showers of Blessing* வானொலி ஒலிபரப்பு துவங்குகிறது.

1946 நசரேயத் தலைமையகத்தில் ஸ்பானிஷ் மொழிப் பிரிவு துவங்கப்பட்டது.

1948 அருட்பணிகளுக்காக முதல் அலபஸ்டார் பெட்டிக் காணிக்கை சேகரிக்கப்பட்டது.

1948 இத்தாலிய சபைகள் நசரேயத் திருச்சபையோடு இணைகின்றன.

1952 இங்கிலாந்திலும் தென்னாப்பிரிக்காவிலும் செயல்பட்ட இன்டர்நேஷனல் ஹோலினஸ் மிஷன் நசரேயத் திருச்சபையோடு இணைந்தது.



ஃபர்ஸ்ட் கிளப், கேரவான், புதிர்கள் மற்றும் பிற செயல் திட்டங்களும் பாடத் திட்டங்களும் நடத்தப்படுகின்றன. பெரியோருக்கான ஊழியத்தில் தொடர்ந்த சாமானியப் பயிற்சிக்கான (Continuing Lay Training - CLT) பாடத் திட்டங்கள், குடும்பங்கள், ஆண்கள், பெண்கள், பெரியவர்கள், தனித்திருக்கும் பெரியவர்கள் இவர்களுக்கான பாடத்திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

இன்று ஞாயிறு பள்ளியானது ஒரு இடத்தைக் கொண்டோ அல்லது நாளைக் கொண்டோ கட்டுப்படுத்தப் படுவதில்லை. வெவ்வேறு வடிவங்களில் இது செயல்படுகிறது. இங்கேதான் சீஷத்துவம் துவங்குகிறது, தலைமைத்துவம் வளருகிறது. இங்கேதான் நாம் சிசுப் பருவத்திலிருந்து பெரியவர்கள் வரை ஒவ்வொரு தலைமுறையினருக்கும் இரட்சிப்பு மற்றும் பரிசுத்தத்தின் செய்தியைக் கொண்டு செல்லுகிறோம்.

http://nazarene.org/ministries/ssm/display.aspx

---

**நசரேய சபையின் கால வரிசை**

1953 *La Hora Nazarena* வானொலி ஒலிபரப்பு துவங்குகிறது.

1955 இங்கிலாந்திலிருந்த கல்வாரி ஹோலினஸ் சர்ச் நசரேயத் திருச்சபையோடு இணைந்தது.

1958 காஸ்பல் ஒர்க்கர்ஸ் சர்ச் ஆஃப் கனடா நசரேயத் திருச்சபையோடு இணைந்தது.

1958 பொன்விழாக் கொண்டாட்டங்கள் டெக்சாசில் பைலட் பாயின்டில் நடத்தப்பட்டன.

1964 கல்லூரி மாணவர்களைக் கொண்ட அருட்பணி அணியாகிய Nazarene Evangelistic Ambassadors அணி துவங்கப்பட்டது.

# இளைஞர்களுக்கு ஊழியம்செய்வதில் ஒரு நூற்றாண்டைக்

### ... கொண்டாடுதல்

துவக்க காலத்திலிருந்து இளம்பெண்களுக்காக நடத்தப்பட்டுவரும் Company E மற்றும் இளைஞர்களுக்காக நடத்தப்பட்டுவரும் Brotherhood of St. Stephen ஆகிய அமைப்புகள் இளைஞர்கள் தேவனுடைய வார்த்தையைப் படிக்கவும், ஜெபிக்கவும், சாட்சிகளைப் பகிர்ந்துகொள்ளவும், சுவிசேஷ ஊழியப் பயிற்சிகளை நடத்தவும் இளைஞர்களுக்கு ஊக்கமளித்து வந்திருக்கின்றன. இந்த முன்னோடிகள் 1 தீமோத்தேயு 4:12 வசனத்தைத் தங்கள் கருப்பொருளாகத் தெரிந்துகொண்டிருந்தார்கள்: ''உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.''

இந்த அஸ்திபாரத்தைக் கொண்டு இளைஞருக்கான ஊழியமானது 1908இல் 523 உறுப்பினர்களிலிருந்து 1923இல் 12,768 உறுப்பினர்களாக வளர்ச்சிபெற்றது. அப்போது நசரேய இளைஞர்கள் சங்கம் அமைப்புரீதியாக உருவாக்கப்பட்டது. சபை தொடர்ந்து இன்னுமதிகமாக உலகப் பார்வையைப் பெற்றுவந்ததைப் பிரதிபலிக்கும்படியாக இந்தச் சங்கத்தின்பெயர் 1972 இல் நசரேய சர்வ தேச இளைஞர் அமைப்பு (Nazarene Youth International - NYI) என்று மாற்றப்பட்டது.

நசரேய இளைஞர் இயக்கமானது ஊழிய வாய்ப்புக்களைக் கொடுக்கும் ஒரு சர்வதேச நிறுவனமாக ஆகிவிட்டிருக்கிறது. முகாம்களும், கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன, அருட்பணி அனுபவங்கள் அளிக்கப்படுகின்றன, பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இன்று இந்த இயக்கத்தில் 380,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இருக்கிறார்கள். எல்லா உலகப் பிராந்தியங்களிலும் இளைஞர் ஊழியத்துக்கான செயல்தந்திரங்கள் அமுலாக்கப்படுகின்றன. நாங்கள் தொடர்ந்து ''உன்னதமான கிறிஸ்தவ வாழ்க்கையை'' நாடுகிறோம். சுவிசேஷ ஊழியம், சீஷத்துவம், செயல் இயக்கம் ஆகிய முக்கியமான செயல்தந்திரங்களைக் கட்டியெழுப்ப முயலுகிறோம்.

www.NYIToday.org

**நசரேய சபையின் கால வரிசை**

1967 பாபுவா நியூகினியில் குட்ஜிப் என்ற இடத்தில் நசரேய மருத்துவமனை துவங்கப்பட்டது.

1974 சுவிட்சர்லாந்தில் முதல் Nazarene Youth International மாநாடு நடத்தப்பட்டது.

1975 வாஷிடங்டனில் கம்யூனிட்டி ஆஃ ஹோப்பிலும், நியூயார்க்கில் லாம்ப் அரங்கிலும் நகர ஊழியங்கள் வலியுறுத்தப்பட்டன.



**நசரேய சபையின் கால வரிசை**

1975–76 ஹெய்டியில் ஏற்பட்ட பஞ்சம், குவாடமாலாவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி இவைகளுக்காக காருணிய ஊழிய முயற்சிகள் தூண்டிவிடப்பட்டன.

1976 சபையின் சர்வதேச வடிவமைப்பு ஆய்வுசெய்யப்படுவதைப் பொது அசெம்பிளி அங்கிகரிக்கிறது.

1980 பொது அசெம்பிளி ''சர்வதேசமயமாக்குதலை'' ஏற்றுக்கொண்டு சபையைப் பிராந்தியங்களாகப் பிரிக்கிறது.

# நமது அடிப்படை மதிப்பீடுகளைக்

## ... கொண்டாடுதல்

**நாம் கிறிஸ்தவ மக்களாக இருக்கிறோம்**

உலகளாவிய திருச்சபையின் உறுப்பினர்களாக நாம் இயேசுகிறிஸ்துவே ஆண்டவர் என்பதை அறிவிப்பதில் எல்லா மெய்யான விசுவாசிகளோடும் சேர்ந்துகொள்ளுகிறோம். நாம் பரிசுத்தத்தைப் போதிக்கும்படியாகவும், இந்த முக்கியமான வெஸ்லிய–பரிசுத்தப் போதனைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படியாகவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்: தேவனுடைய பின்தொடர்ந்து வரும் கிருபை, கிருபையின் வழிவகைகள், மனந்திரும்புதல், விசுவாசம், மறுபடியும் பிறத்தல், நீதிமானாக்கப்படுதல், முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல், இரட்சிப்பின் நிச்சயம்,கிறிஸ்தவ சமுதாயமும் அதன் ஒழுங்குகளும், அன்பில் பரிபூரணம்.

**நாம் பரிசுத்த இயக்க மக்களாக இருக்கிறோம்**

பரிசுத்தராகிய தேவன் பரிசுத்த வாழ்க்கை வாழும்படி நம்மை அழைத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிருபையின் இரண்டாவது கிரியையைச் செய்வதை நாடுகிறார் என்றும் (இது ‘‘முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல்’’ என்றும் ‘‘பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்’’ என்றும் அழைக்கப்படுகிறது) நம்மை எல்லாப் பாவங்களிலிருந்தும் சுத்திகரித்து, தேவ சாயலில் நம்மைப் புதுப்பிக்கிறார் என்றும், தேவனிடத்திலும் நமது அயலாரிடத்திலும் அன்புகூரும்படி நம்மைப் பலப்படுத்துகிறார் என்றும், நம்மில் கிறிஸ்துவின் குணாதிசயத்தை உருவாக்குகிறார் என்றும் விசுவாசிக்கிறோம்.

**நாம் ஊழிய ஆர்வம்கொண்ட மக்களாக இருக்கிறோம்**

நாம் அனுப்பப்பட்ட மக்களாக, கிறிஸ்துவின் அழைப்புக்குச் செவிசாய்த்து, உலகெங்கும் சென்று கிறிஸ்துவின் ஆளுகைக்குச் சாட்சி கூறும்படியாகவும், சபையைக் கட்டியெழுப்புவதில் தேவனோடு பங்கெடுக்கிறவர்களாகவும், ஆராதித்து, சுவிசேஷத்தை அறிவித்து, சீஷராக்கி, ஊழியத்துக்கு ஆயத்தமாக்குவதில் ஈடுபடும்படியாகவும் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரால் பலப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

*நசரேய சபையைக் குறித்தும், அதன் நம்பிக்கைகள், அடிப்படை மதிப்பீடுகள், உலகளாவிய ஊழியங்கள் இவைகளைக் குறித்து அறிய விரும்பினால் இந்த இணையதளத்தோடு தொடர்பு கொள்ளுங்கள்:* http://nazarene.org/.

---

**நசரேய சபையின் கால வரிசை**

1984 உலக அருட்பணிப் பிரிவுக்குள்ளாக நசரேய காருணிய ஊழியத்தின் அலுவலகம் திறக்கப் படுகிறது.

1988 நைஜீரியாவின் சுதேசி நசரேயத் திருச்சபை நசரேயத் திருச்சபையோடு இணைந்தது.

1993 சர்வதேச கல்வி நிர்வாகக் குழு உருவாக்கப்பட்டது.

1997 *Herald of Holiness* பத்திரிகையையும் *World Mission* பத்திரிகையையும் இணைத்து *Holiness Today* பத்திரிகை அதிகாரபூர்வமாகத் துவங்கப்பட்டது.

1998 அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கனடாவிலுமுள்ள நசரேயர்கள் நசரேயத் திருச்சபையில் சிறுபான்மையினராக ஆகிறார்கள்.

2008 151 உலகப் பகுதிகளில் 1.6 மில்லியனுக்கும் அதிகமான நசரேயர்கள் உள்ளூர் சபைகளில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

## நசரேயத் துவக்கங்கள்: தாய்ச் சபைகள்

### 1887–1906

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கிரேட் பிரிட்டனிலும் துவங்கிய ஏழு வெஸ்லிய–பரிசுத்த சபைப்பிரிவுகளின் இணைப்பின் பயனாக நசரேயத் திருச்சபை உருவாகியது.

## ஒரு ஒருங்கிணைப்புக்கான காலாண்டு

### 1896–1922

1915ஆம் ஆண்டுக்குள்ளாக முன்பு ஏழு தனிப்பட்ட பரிசுத்த சபைப்பிரிவுகளும், எட்டாவது சபைப்பிரிவின் ஒரு பகுதியும் ஒரே தனிப்பட்ட சபையாக இணைந்துவிட்டிருக்கின்றன.

## இன்னும் பூரணமான ஐக்கியத்தை நோக்கி...

### 1911–1928

சபைத்தலைவர்கள் ஒரு பொதுவான செயல்திட்டத்தின் மூலமாக இணைக்கப்பட்ட குழுக்களின் ஐக்கியத்தை நாடினார்கள். நசரேய வெளியீட்டு நிறுவனமும், *Herald of Holiness* பத்திரிகையும் துவங்கப்பட்டன. பொதுக் கண்காணிப்பாளர் ஹிராம் எஃப். ரேனால்ட்ஸ் ‘‘உலகத்துக்கு அருட்பணியை’’ ஊக்குவித்தார். கலைக்கல்லூரிகளின் வலைப்பின்னல் வளர்ச்சிபெற்றது.

## எதிர்ப்புக்களின் மத்தியிலும் விடாதிருத்தல்

### 1928–1945

தீவிரமான பொருளாதார நெருக்கடி மற்றும் இரண்டாம் உலகப்போரின் காரணமாகப் பல அருட்பணித் தளங்களை மூடிவிட வேண்டியிருந்தது. ‘‘வெட்டிக் குறைத்தல்’’ என்ற இந்தக் கொள்கை உலக அருட்பணி நடவடிக்கைகளைக்



கட்டுப்படுத்தியது. என்றாலும், நசரேயர்கள் தொடர்ந்து சீனாவிலும், ஸ்விட்சர்லாந்தியிலும் இருந்த தங்கள் மருத்துவ மனைகளைத் தொடர்ந்து வளர்ச்சிபெறச் செய்தார்கள். இந்தியாவில் மூன்றாவது மருத்துவமனை திறக்கப்பட்டது.

## நூற்றாண்டின் மத்திய காலகட்டத்தில் ஆத்துமாக்களுக்கான எழுப்புதல் முயற்சிகள்

### 1945–1960

போர் முடிந்த பின்னர் எடுக்கப்பட்ட விரிவாக்க முயற்சிகளின் மூலமாகச் சபை புதிய உலகப் பகுதிகளில் நுழைந்தது. புதிய இணைப்புகள் உண்டாகின. நூற்றாண்டின் மத்திய காலகட்டத்தில் ஆத்துமாக்களுக்கான எழுப்புதல் கூட்டங்கள் சபையின் ஊழிய உணர்வுக்கு அடையாளமாக இருந்தது. பல மொழிகளிலும் வானொலி ஒலிபரப்புகள் துவங்கப்பட்டன.

## போருக்குப் பின்வந்த சுவிசேஷ ஊழியத்தின் வலியுறுத்தலை நோக்கி...

### 1960–1980

ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகளும், 1960 ஐ அடுத்த ஆண்டுகளில் நடைபெற்ற சமூகப் புரட்சிகளும் உலக அருட்பணிக்கான புதிய வாய்ப்புக்களையும், சபையின் இளைஞரை எட்டுவதற்கான வாய்ப்பையும் கொடுத்தன. Lost and Found போன்ற இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த இசைக்குழுக்களும், Student Mission Corps போன்ற மாணவர் அருட்பணி வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டன. 1970ஐ அடுத்த ஆண்டுகளில் நகர ஊழியமும், காருணிய ஊழியமும் சபையில் முக்கியமான ஊழியங்களாக ஆகின.

## சர்வதேசமயமாக்கலின் காலகட்டம்

## 1976–2003

சமுதாய மற்றும் தேசிய எல்லைகளைக் கடந்துசெல்லும்படி 1980ஆம் ஆண்டில் நடந்த ஜெனரல் அசெம்பிளி ''சர்வதேச மயமாக்கலை'' ஏற்றுக்கொண்டது. குறிப்பிடத்தக்க வகையில் புதிய அருட்பணித் தளங்களில் ஊழியங்கள் துவங்கப்பட்டன. துரிதமான வளர்ச்சி ஏற்பட்டது: 1980இல் 674,000 உறுப்பினர்கள் என்பதிலிருந்து 2001இல் 1.4 மில்லியன் உறுப்பினர்கள் என்ற வளர்ச்சி ஏற்பட்டது. நசரேய காருணிய ஊழியங்கள் துவங்கப்பட்டதின் மூலமாகச் சமுதாய ஊழியங்களின் புதிய வடிவங்கள் நிறுவனங்களாக உறுதிப் படுத்தப்பட்டன.



## நசரேயத் திருச்சபையின் உலகப்பகுதிகள்

| | உலகப்பகுதி | ஆண்டு | பிராந்தியம் |
|---|---|---|---|
| 1 | இந்தியா | 1898 | யூரேசியா |
| 2. | கேப் வெர்ட் | 1901 | ஆப்பிரிக்கா |
| 3. | குவாடமாலா | 1901 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 4. | க்யூபா | 1902 | கரீபியன் |
| 5. | கனடா | 1902 | கனடா |
| 6. | மெக்சிகோ | 1903 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 7. | பிரிட்டன் | 1906 | யூரேசியா |
| 8. | ஜப்பான் | 1908 | ஆசியா–பசிபிக் |
| 9. | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1908 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 10. | சுவாசிலாந்து | 1911 | ஆப்பிரிக்கா |
| 11. | பெரு | 1917 | தென் அமெரிக்கா |
| 12. | அர்ஜென்டினா | 1919 | தென் அமெரிக்கா |
| 13. | தென் ஆப்பிரிக்கா | 1919 | ஆப்பிரிக்கா |
| 14. | சீரியா | 1920 | யூரேசியா |
| 15. | இஸ்ரேல் | 1921 | யூரேசியா |
| 16. | மொசாம்பிக் | 1922 | ஆப்பிரிக்கா |
| 17. | பார்படாஸ் | 1926 | கரீபியன் |
| 18. | டிரினிடாட் | 1926 | கரீபியன் |
| 19. | பேலிஸ் | 1934 | கரீபியன் |

| | | | |
|---|---|---|---|
| 20. | நிக்கராகுவா | 1937 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 21. | போர்ட்டோ ரிக்கோ | 1944 | கரீபியன் |
| 22. | வெர்ஜின் தீவுகள் | 1944 | கரீபியன் |
| 23. | பொலீவியா | 1945 | தென் அமெரிக்கா |
| 24. | ஆஸ்திரேலியா | 1945 | தென் அமெரிக்கா |
| 25. | கயானா | 1946 | கரீபியன் |
| 26. | பிலிப்பைன்ஸ் | 1946 | ஆசியா—பசிபிக் |
| 27. | இத்தாலி | 1948 | யூரேசியா |
| 28. | தென்கொரியா | 1948 | ஆசியா—பசிபிக் |
| 29. | உருகுவே | 1949 | தென் அமெரிக்கா |
| 30. | ஹெய்டி | 1950 | கரீபியன் |
| 31. | ஜோர்டான் | 1950 | யூரேசியா |
| 32. | லெபனான் | 1950 | யூரேசியா |
| 33. | நியூசிலாந்து | 1952 | ஆசியா—பசிபிக் |
| 34. | பனாமா | 1953 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 35. | பாப்புவா நியூகினியா | 1955 | ஆசியா—பசிபிக் |
| 36. | தாய்வான் | 1956 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 37. | மாலவி | 1957 | ஆப்பிரிக்கா |
| 38. | அமெரிக்க சமோயா | 1958 | ஆசியா—பசிபிக் |
| 39. | பிரேசில் | 1958 | தென் அமெரிக்கா |
| 40. | ஜெர்மனி | 1958 | யூரேசியா |
| 41. | டென்மார்க் | 1960 | யூரேசியா |
| 42. | ஜாம்பியா | 1961 | ஆப்பிரிக்கா |



| | | | |
|---|---|---|---|
| 43. | சிலி | 1962 | தென் அமெரிக்கா |
| 44. | ஜிம்பாப்வே | 1963 | ஆப்பிரிக்கா |
| 45. | காஸ்டாரிக்கா | 1964 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 46. | எல்சால்வடார் | 1964 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 47. | சமோயா | 1964 | ஆசியா—பசிபிக் |
| 48. | ஜமைக்கா | 1956 | கரீபியன் |
| 49. | நெதர்லாந்து | 1967 | யூரேசியா |
| 50. | பெர்முடா | 1970 | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 51. | ஹொன்டூராஸ் | 1970 | மெக்சிகோ/தென் அமெரிக்கா |
| 52. | பஹாமா தீவுகள் | 1971 | கரீபியன் |
| 53. | குவாம் | 1971 | ஆசியா—பசிபிக் |
| 54. | ஈக்வடார் | 1972 | தென் அமெரிக்கா |
| 55. | செயின்ட் லூசியா | 1972 | கரீபியன் |
| 56. | ஆன்டிகுவா | 1973 | கரீபியன் |
| 57. | இந்தோனேஷியா | 1973 | ஆசியா—பசிபிக் |
| 58. | நமீபியா | 1973 | ஆப்பிரிக்கா |
| 59. | போர்ச்சுகல் | 1973 | யூரேசியா |
| 60. | டோமினிக்கா | 1974 | கரீபியன் |
| 61. | டோமினிக்கன் குடியரசு | 1974 | கரீபியன் |
| 62. | ஹாங்காங் | 1974 | ஆசியா—பசிபிக் |
| 63. | கொலம்பியா | 1975 | தென் அமெரிக்கா |
| 64. | செயின்ட் வின்ஸென்ட | 1975 | கரீபியன் |

| | | | |
|---|---|---|---|
| 65. | மார்ட்டினிக் | 1976 | கரீபியன் |
| 66. | பிரான்ஸ் | 1977 | யூரேசியா |
| 67. | கிரெனடா | 1977 | கரீபியன் |
| 68. | நைஜீரியா | 1977 | ஆப்பிரிக்கா |
| 69. | ஸ்விட்சர்லாந்து | 1978 | யூரேசியா |
| 70. | பராகுவே | 1980 | தென் அமெரிக்கா |
| 71. | ஸ்பெயின் | 1981 | யூரேசியா |
| 72. | வெனிசூலா | 1982 | தென் அமெரிக்கா |
| 73. | செயின்ட் கிட்–நேவிஸ் | 1983 | கரீபியின் |
| 74. | அஜோர்ஸ் | 1984 | யூரேசியா |
| 75. | போட்ஸ்வானா | 1984 | ஆப்பிரிக்கா |
| 76. | கென்யா | 1984 | ஆப்பிரிக்கா |
| 77. | மியன்மார் (பர்மா) | 1984 | ஆசியா–பசிபிக் |
| 78. | சூரினாம் | 1984 | கரீபியன் |
| 79. | சைப்ரஸ் | 1985 | யூரேசியா |
| 80. | எகிப்து | 1986 | யூரேசியா |
| 81. | குவாடலூப் | 1986 | கரீபியன் |
| 82. | கொடெ டிவோர் | 1987 | ஆப்பிரிக்கா |
| 83. | அயர்லாந்து | 1987 | யூரேசியா |
| 84. | பிரெஞ்சு கயானா | 1988 | கரீபியன் |
| 85. | செனிகல் | 1988 | ஆப்பிரிக்கா |
| 86. | உகாண்டா | 1988 | ஆப்பிரிக்கா |
| 87. | தாய்லாந்து | 1989 | ஆசியா–பசிபிக் |
| 88. | காங்கோ மக்கள்குடியரசு | 1990 | ஆப்பிரிக்கா |
| 89. | கானா | 1990 | ஆப்பிரிக்கா |



| | | | |
|---|---|---|---|
| 90. | லைபீரியா | 1990 | ஆப்பிரிக்கா |
| 91. | ருவாண்டா | 1990 | ஆப்பிரிக்கா |
| 92. | டான்சானியா | 1990 | ஆப்பிரிக்கா |
| 93. | அங்கோலா | 1992 | ஆப்பிரிக்கா |
| 94. | பங்களாதேஷ் | 1992 | யூரேசியா |
| 95. | கம்போடியா | 1992 | ஆசியா=பசிபிக் |
| 96. | எத்தியோப்பியா | 1992 | ஆப்பிரிக்கா |
| 97. | ருமேனியா | 1992 | யூரேசியா |
| 98. | ரஷியா | 1992 | யூரேசியா |
| 99. | சாலொமோன் தீவுகள் | 1992 | ஆசியா–பசிபிக் |
| 100. | யுக்ரேன் | 1992 | யூரேசியா |
| 101. | அல்பேனியா | 1993 | யூரேசியா |
| 102. | எரிட்ரியா | 1993 | ஆப்பிரிக்கா |
| 103. | லெசோத்தோ | 1993 | ஆப்பிரிக்கா |
| 104. | மடகாஸ்கர் | 1993 | ஆப்பிரிக்கா |
| 105. | பல்கேரியா | 1994 | யூரேசியா |
| 106. | Creative Access Area # 3 | | 1994 |
| 107. | செயின்ட் மார்ட்டின் | 1994 | கரீபியன் |
| 108. | பிஜி | 1995 | ஆசியா–பசிபிக் |
| 109. | பாலாவ் | 1995 | ஆசியா–பசிபிக் |
| 110. | ஹங்கேரி | 1996 | யூரேசியா |
| 111. | கஜக்ஸ்தான் | 1996 | யூரேசியா |
| 112. | பாகிஸ்தான் | 1996 | யூரேசியா |
| 113. | பர்க்கினா ஃபாசோ | 1997 | ஆப்பிரிக்கா |
| 114. | காங்கோ குடியரசு | 1997 | ஆப்பிரிக்கா |

| | | | |
|---|---|---|---|
| 115. | சாவோ டோமே | 1997 | ஆப்பிரிக்கா |
| 116. | பெனின் | 1998 | ஆப்பிரிக்கா |
| 117. | நேபாளம் | 1998 | யூரேசியா |
| 118. | டோகோ | 1998 | ஆப்பிரிக்கா |
| 119. | புருண்டி | 1999 | ஆப்பிரிக்கா |
| 120. | கேமரூன் | 1999 | ஆப்பிரிக்கா |
| 121. | Creative Access Area # 1 | 1999 | |
| 122. | Creative Access Area # 5 | 1999 | |
| 123. | Creative Access Area # 7 | 1999 | |
| 124. | ருரோஷியா | 1999 | யூரேசியா |
| 125. | காபோன் | 1999 | ஆப்பிரிக்கா |
| 126. | போலந்து | 1999 | யூரேசியா |
| 127. | சூடான் | 1999 | ஆப்பிரிக்கா |
| 128. | அரூபா | 2000 | கரீபியன் |
| 129. | சுயக் | 2000 | ஆசியா—பசிபிக் |
| 130. | Creative Access Area # 2 | 2000 | |
| 131. | மாசிடோனியா | 2000 | யூரேசியா |
| 132. | போன்பே | 2000 | ஆசியா—பசிபிக் |
| 133. | சைபான் | 2000 | ஆசியா—பசிபிக் |
| 134. | ஸ்ரீலங்கா | 2000 | யூரேசியா |
| 135. | டோங்கா | 2000 | ஆசியா—பசிபிக் |
| 136. | Creative Access Area # 4 | 2001 | |
| 137. | கிழக்கு டைமோர் | 2001 | ஆசியா—பசிபிக் |
| 138. | வானாட்டு | 2001 | ஆசியா—பசிபிக் |
| 139. | ஆர்மீனியா | 2002 | யூரேசியா |



| | | | |
|---|---|---|---|
| 140. | Creative Access Area # 6 | 2002 | |
| 141. | ஈக்வடோரியல் கானா | 2002 | ஆப்பிரிக்கா |
| 142. | கிரீஸ் | 2002 | யூரேசியா |
| 143. | மெடீரா தீவுகள் | 2002 | யூரேசியா |
| 144. | Creative Access Area # 8 | 2003 | |
| 145. | Creative Access Area # 9 | 2003 | |
| 146. | ரியூனியன் | 2003 | ஆப்பிரிக்கா |
| 147. | கினியா—பிஸ்ஸா | 2004 | ஆப்பிரிக்கா |
| 148. | சியர்ரா லியோன் | 2004 | ஆப்பிரிக்கா |
| 149. | கொசோவோ | 2005 | யூரேசியா |
| 150. | ஈராக் | 2006 | யூரேசியா |
| 151. | ஜான்சிபார் | 2006 | ஆப்பிரிக்கா |